# திருப்பலி அழைப்பு

## Fête des Rois Mages

## மூன்று அரசர்கள் – பொங்கல் திருப்பலி

## 11/01/2026 –Cathédrale de la Résurrection, Evry (91000)

### 14h30 நற்கருணை ஆராதனை Adoration du St. Sacrement

### 15h00 தமிழ் திருப்பலி – Messe Tamoule



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,
"வந்து பாருங்கள்" என்று இயேசு அழைக்கும் குரலொலி கேட்டு, அவர் விரும்பும் பணியைச் செய்ய, இந்த ஞாயிறு நம்மை வரவேற்கிறது. தன்னைப் பின் தொடர்ந்த சீடர்களை திரும்பி பார்த்து, என்ன தேடுகிறீர்கள் எனக் கேட்டு, வந்து பாருங்கள் என சீடர்களுக்கு யேசு அழைப்பு விடுத்ததே, தன் பணியைச் செய்யும் கருவிகளாக அவர்களை மாற்றவே. இந்த அழைப்பு அவர்களின் வாழ்க்கைப் பாதையையே புரட்டிப் போட்டது. அதேபோல் «என்ன தேடுகிறீர்கள்»என்ற கேள்வியை யேசு நம்மை பார்த்து கேட்கிறார். நமது வாழ்க்கையில் பொன், பொருள், பதவி, பட்டம், அதிகாரம் எனத் தேடிக் கொண்டிருக்கும் நம்மைப் பார்த்து "வந்து பாருங்கள்" என அழைக்கிறார்.
ஆண்டவரைத் தேடி சென்று, அவர் விடுக்கும் அழைப்பை ஏற்று, அன்பை விதைக்க இறையுறவில் நம் குடும்பத்தைக் கட்டி எழுப்ப, இறைவனின் திருவுளம் நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளோம். நமது கடமையை மிகச் சரியாகச் செய்ய அருள் தரும் திருப்பலி இது. இறைவனின் அழைப்பை ஏற்று அவரின் அன்பைத் தேடி, அதையே நம் வாழ்க்கை பாதையில் விதைக்கும் வல்லமை கேட்டு மன்றாடுவோம். ஆகவே அனைவரும் இணைந்து கூடி இத்திருப்பலியை ஒப்புக்கொடுக்க வாருங்கள் என அன்புடன் அழைக்கின்றேன்.

*திருப்பலி முடிந்தபின், அனைவரும் சிற்றுண்டி பகிர்வு உபசரிப்பில் கலந்துகொள்ளவும், அவரவர் விருப்பம், வேண்டுதலுக்கு ஏற்ப சிற்றுண்டிகள் கொண்டுவந்து பகிர்ந்துகொள்ளவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன், நன்றி.

Chers frères & sœurs,

Ce dimanche, nous vous encourageons à prêter attention à la voix de Jésus qui nous convie à « Venir et voir » et à réaliser l'œuvre qu'il nous confie. Jésus a invité ses disciples à se tourner vers lui et leur a posé la question de ce qu'ils cherchaient, les incitant à venir et voir, afin de les transformer en instruments de son œuvre. Cet appel a métamorphosé leur existence. De la même manière, Jésus nous interroge : « Que cherchez-vous ? » Il nous appelle à « Venir et voir » lorsque nous poursuivons sans cesse de biens matériels, le statut social, les titres et le pouvoir dans nos vies. Nous avons la responsabilité de rechercher le Seigneur, d'accueillir son appel, de semer l'amour, de construire nos familles dans une relation avec Dieu et de réaliser sa volonté. C'est l'Eucharistie qui nous accorde la grâce d'accomplir notre devoir de manière parfaite. Accueillons l'appel de Dieu, recherchons son amour et prions pour obtenir la force de le semer dans nos vies. C'est pourquoi je vous invite tous à vous rassembler et à prier ensemble.

*** Après la messe, je vous encourage à prendre part au partage des rafraîchissements et vous invite à apporter des boissons et des collations selon vos préférences. Merci.**


**Bien fraternellement**
**Père Arul Anandu ANTONYSAMY**
**(Diocèse d'Évry - Corbeil- Essonnes)**
Contact N° 0610633573


LR.j